# <u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
# <u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
# <u>MCOP .No.150/2021</u>

**<u>நாள் : 06.11.2025</u>**

**எ.ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தேவன் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை பெயர் | : | திரு.ராஜா | வயது | : | 41 |
| ஊர் | : | கல்லேத்திப்பட்டி | தொழில் | : | லாரி டிரைவர் |
| வட்டம் | : | பரூகூர் | தேசியம் | : | இந்தியன் |

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு 04.11.2025 சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை எனறால் சரிதான். நான் 1 ஆம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். திருப்பத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் இந்த வழக்கு விபத்து சம்மந்தமாக எனக்கு எதிராக தான் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது சம்மந்தமாக திருப்பத்தூர் தாலுகா காவல்நிலைய காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். எனது வாகனமும் விபத்தில் பாதிக்கப்பட்டவரின் வாகனமும் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு ஆய்வு செய்ததற்கு பின்னிட்டே எனது வாகனத்தை எடுத்து சென்றேன் என்றால் சரிதான். மேற்படி ம.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் எனக்கு முன்பாக சென்ற மனுதாரரின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக தான் கண்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் Housing Board கூட்டு ரோடு அருகே சிக்னல் போட்டு கை காட்டி தர்மபுரி நோக்கி திரும்பு போது விபத்து நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் வேறு விதமாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு எதிராக நாளாது தேதி வரை நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனது லாரிக்கு விபத்து சமயத்தில் முறையான இன்சூரன்ஸ் இருந்து என்றால் சரிதான். அதேபோல் விபத்து நடந்த

தேதியில் ஓட்டுநர் உரிமமும் செல்லத்தக்க வகையில் இருந்தது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் மனுதாரரை பொருத்தவரை எனது வாகனத்திற்கு மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். மனுதாரருக்கு காயம் ஏற்பட்டுள்ள நிலையில் அது சமந்தமாக இன்சூரன்ஸ் கம்பெனி இழப்பீடு செலுத்துவதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்

<u>நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை</u>

1. நான் 3/19 கல்லேத்திப்பட்டி, நடுப்பட்டி, பரூகூர் தாலுகா, செவ்வம்பட்டி, கிருஷ்ணகிரி என்ற முகவரியில் வசித்துவருகிறேன் என்றால் சரிதான். மேற்படி முகவரி தான் எனது ஆதார் அடையாள அட்டையிலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி ஆதார் அடையாள அட்டை முன்னிலைப்படுத்திகிறார். ஆதார் அடையாள அட்டையில் கண்டுள்ள முகவரிக்கு தான் சாட்சி சம்மன் அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். (சாட்சிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையானது பரிசீலிக்கப்பட்டது).

<u>மறுகுறுக்கு விசாரணை</u>

1. மேற்படி அழைப்பாணையில் கையொப்பமிட்டு பெற்றேனா என்றால் ஆமம். நான் சாட்சியம் அளிக்க வரும் போது அழைப்பாணையை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினேனா என்றால் இல்லை. (சாட்சிக்கு 2 முறையும் அனுப்பப்பட்ட அழைப்பாணையானது மறுபடியும் பரிசீலிக்கப்பட்டு சாட்சி அழைப்பாணையில் கண்ட கிராமத்தில் குடியில்லை என்று சம்மன் நகல் திருப்பப்பட்டதாக நீதிமன்ற கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது), நான் வழக்கிற்காக வேண்டி அழைப்பாணையை பெற்றுக் கொண்டதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.